**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 409/2007**

Deposition of **<u>P.W.2</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 25.07.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : வெங்கடேசன் (எ) சின்னதுரை Father's Name : கிருஷ்ணசாமி

துவக்க நேரம் : 01.00 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) தாவா சொத்திற்கும், நான் குடியிருந்து வரும் இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் உள்ளது என்றால் சுமார் 1-1/2 கிலோமீட்டர் இருக்கும். தாவா சொத்தை சுற்றி எனக்கு விவசாய நிலங்கள் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் எதுவும் பிரச்சினை நடந்தால் மற்றவர்கள் கூறிதான் எனக்கு தெரியவரும் என்றால் சரிதான்.

2) தாவா சொத்தில் பிரதிவாதிகள் பாதை அமைக்க முயற்சி செய்த விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் வழக்கறிஞர் திரு.பெரியசாமி என்பவர் சொல்லிதான் எனக்கு தெரியும். எனது நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் எந்த தினத்தில், எந்த நேரத்தில் தாவா சொத்தில் பாதை அமைக்க சென்றார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ஆனால், கடந்த 2008-ம் ஆண்டு 2-வது மாதம் அவ்வாறு பிரதிவாதிகள் பாதை அமைக்க சென்றார்கள்.

3) நான் சொல்வது தவறு என்றாலும் வாதி கூறியதன்பேரில் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் தாவா பிரச்சினை தொடர்பாக வழக்கறிஞர் திரு. பெரியசாமியோ, முன்னால் தலைவர் பார்வதி ராஜா என்பவரோ எந்த பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பேச்சுவார்த்தை தினத்தன்று வட்டார வளர்ச்சி அலுவலர் கலந்து கொண்டாரா என்றால் கலந்து கொண்டார். நான் சொல்வது தவறு என்றாலும் வட்டார வளர்ச்சி அலுவலர் எவ்வித பேச்சு வார்த்தையிலும் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

4) வாதி தாவா சொத்தின் ஒரு பகுதியை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி தானசெட்டில்மெண்ட்-ஐ ரத்து செய்வதற்கு வாதி இதுநாள்வரை எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல, நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் சொல்வது தவறு என்றாலும் வாதி இதுநாள்வரை அவ்வாறு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்த சொத்தின் விஸ்தீரணம், நான்கு எல்லைகள் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சொத்தின் விஸ்திரணம், நான்கு எல்லைகள் தெரியாத பட்சத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் மேற்படி சொத்தை சுவாதீனம் எடுக்கவில்லை என என்னால் கூறமுடியாது என்று சொன்னால் சரியல்ல.

5) வாதி தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்த சொத்து குறிப்பாக எந்த இடத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்த சொத்து வாதியும், அவரது குடும்பத்தாரும் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்று வாதி கூறியதன்பேரில் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

தானசெட்டில்மெண்ட் அடிப்படையில் வட்டார வளர்ச்சி அலுவலர் தானமாக பெறப்பட்ட சொத்தில் பாதை அமைக்கவோ, மற்ற காரியங்கள் செய்யவோ அவருக்கு முழு உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

முடிவு நேரம்: 01.15 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

sd/-D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No.409/2007, Dt.25.07.2025.